**31.01.2025**

**அ.வ.எண்.132/2022**

**வா.சா.2 ஏழுமலை அவர்களின் குறுக்கு விசாரணை**

**1**. தாவா சொத்தின் சர்வே எண் **275** அல்லது **272** என தெரியவில்லை. தாவா சொத்தின் ஜக்குபந்தி எனக்கு தெரியும். இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கு யார் பெயரிலும் பட்டா வழங்கவில்லை என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களில் தாவா சொத்தில் காலி நத்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்திற்கு உரிமை இல்லாத நபர்கள் பெயரில் மின் இணைப்பு வழங்குவதற்கு அரசால் தடை செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதி கொடுத்த மனு எதற்காக நிலுவையில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் மின் இணைப்பு வழங்க கூடாது என்று எதிர் தரப்பினர் ஆட்சேபணை கொடுத்ததால் நிலுவையில் உள்ளது.

**2**. வாதி பெயரில் தாவா சொத்திற்கான உரிய வருவாய் ஆவணங்கள் இல்லாததால்தான் மின்வாரியம் அவருக்கு மின் இணைப்பு வழங்க முடியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு உரிமையான சொத்து இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியின் ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.